## முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

2024 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

<u>அ.வ.எண். 1250 /2021</u>

**<u>வா.சா.1 கணேசன் 1 ம்பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னுடைய தாத்தா பெயர் ராமனகவுண்டர் என்றால் சரிதான். அவருக்கு 2 மகன்கள் அவர்கள் எனது தகப்பனார் பெரியசாமி மற்றும் முத்துசாமி என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர் ஒரு சகோதரர் அவர் பெயர் பழனிச்சாமி அவர் இந்த வழக்கில் 3 ம் பிரதிவாதி என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதி எனது மகன். என் சித்தப்பா முத்துசாமியின் மகள் தான் 2 ம் பிரதிவாதி என்றால் சரிதான். என் தகப்பனார் பெரியசாமியும் அவரது சகோதரர் முத்துசாமியும் பழைய கச.39/1 ஈ, ரீச.44/16 பெரியசேமூர் அ கிராமத்தில் உள்ள சொத்தை பொறுத்து மட்டும் 11.7.1983 தேதியில் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். மற்ற சொத்துக்களை பொறுத்து பெரியசாமியும், முத்துசாமியும் கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் இறந்த பிறகு நானும், 3 ம் பிரதிவாதியும் முத்துசாமியின் மகளான 2 ம் பிரதிவாதியும் சேர்ந்து கடந்த 1.1.2003 தேதியில் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரிதான்.

2 ம் பிரதிவாதி பேபிக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை 16.6.2021 தேதியில் விற்பனை செய்து விட்டார் என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதி ஒதுக்கப்பட்ட சொத்தை அவர் தனிப்பட்ட வகையில் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். தாவா 1 முதல் 4 வரையிலான அயிட்ட சொத்துக்களில் எனக்கும், என் மகனான 1 ம் பிரதிவாதிக்கும் சரிபாக பாத்தியம் என்றால் சரிதான். தாவா 5 ம் அயிட்ட சொத்தில் எனக்கும், 1 ம் பிரதிவாதிக்கும் பொதுவில் சரிபாதி பாத்தியம் என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட பாதி பங்கை பொறுத்து கொடுப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கானது செலவு தொகை இன்றி தீர்ப்பாவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**